**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 4** |
| **Name** | : | திருமதி.சங்கீதா |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **15.02.2022**

முதல் விசாரணை :

நான் தற்போது வசந்தநகரில் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் மார்க்கெட்டிங்கில் வேலை செய்கிறார். எனது கணவர் பெயர் விஜயபாலன் ஆகும். நான் தனியார் கம்பெனியில் Office Assistant ஆக வேலை செய்கிறேன். கடந்த 2015ம் ஆண்டு நான் கௌரி என்பவர் வீட்டிற்கு அருகில் குடியிருந்தேன். எனக்கு லேப்ரோ ஸ்கோப்பி ஆப்ரேசன் செய்ததால் நான் 10 நாட்கள் வீட்டில் இருந்தேன். கடந்த 2015ம் ஆண்டு ஜூலை மாதம் 22, 23ம் தேதி சமயத்தில் ஒரு நாள் நான் வீட்டில் இருந்தேன். அப்போது கௌரியின் கணவர் எங்கள் வீட்டு கதவை தட்டி கூப்பிட்டார். அவரது பெயர் வெங்கடேசன் ஆகும். நான் மதிய சாப்பாடு சாப்பிட்டுவிட்டு மாத்திரை போட்டுவிட்டு அப்போது தான் படுத்திருந்தேன். எங்கள் வீட்டின் கதவை திறந்து என்ன என்று கேட்டதற்கு, கௌரிக்கு ஏதோ ஆகிவிட்டது பா, வீடு முழுவதும் இரத்தமாக இருக்கிறது என்று சொல்லி சென்றுவிட்டார். நான் உடனடியாக எனது கணவருக்கு போன் செய்து அழைத்தேன். ஆனால் எனது கணவர் போனை எடுக்கவில்லை. 10 நிமிடங்களாக எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. பயத்தில் இருந்தேன். அதற்குள்ளாக கௌரியின்

கணவர் அவரை இழுத்துக்கொண்டு வந்தார். எங்கள் வீட்டைத் தாண்டி தான் படிக்கட்டிற்கு செல்லவேண்டும். எங்கள் வீட்டை தாண்டி கௌரியை கொண்டு சென்றபோது கௌரியின் சேலை கொஞ்சம் விலகி இருந்தது. கௌரியின் கணவர் என்னை கூப்பிட்டு, கொஞ்சம் இந்த சேலையை சரிசெய்துவிடச் சொல்லி கூப்பிட்டார். நான் சரிசெய்துவிட்டவுடன் அவர் கௌரியை இழுத்துக்கொண்டு சென்றுவிட்டார். நான் பயத்தில் எங்கள் வீட்டிற்குள் சென்றுவிட்டேன். எனக்கு மிகவும் பயமாக இருந்ததால் மறுநாள் காலையே நாங்கள் வீட்டினை காலி செய்து சென்றுவிட்டோம். ஆஜர் எதிரியைத் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

போலிஸ் விசாரணையின் போது நான் லேப்ரோ ஸ்கோப்பி அறுவைசிகிச்சை செய்துகொண்டு 10 நாட்களாக நான் வீட்டில் இருந்த விபரத்தை சொல்லியுள்ளேன். நாங்கள் குடியிருந்த முத்துச்செல்வி இல்லம் ஒரு காம்பவுண்டு வீடு ஆகும். அந்த காம்பவுண்டின் கீழ் தளத்தில் 3 வீடுகளும், முதல் தளத்தில் 3 வீடுகளும் உள்ளது. எல்லா வீடுகளும் வடக்கு பார்த்த வாசல் கொண்டது. ஆறு வீடுகளும் ஒன்று போலத்தான் இருக்கும் என்றால் சரிதான். எங்கள் வீட்டின் ஹாலில் பெரிய ஜன்னல் உள்ளது என்றால் சரிதான். அதே போல் எங்கள் வீட்டின் பக்கத்து வீடான வெங்கடேசன் வீட்டின் ஹாலிலும் பெரிய ஜன்னல் உள்ளது என்றால் எல்லாவீடும் ஒன்று போலத்தான் இருக்கும். மரக்கதவும் உண்டு, ஸ்பிரிங் கேட்டும் உண்டு. ஹாலில் பெரிய ஜன்னலும் உண்டு. எங்கள் வீட்டு ஸ்பிரிங் கதவை இழுத்து மூடும்போது சத்தம் கேட்கும். எங்கள் வீட்டிற்கு மேற்கு பக்கம் கார்த்திக் என்பவர் வீடு உள்ளது. கார்த்திக் என்பவரின் மனைவி House Wife என்றால் சரியல்ல. அவரும் வேலைக்கு போவார். எங்கு வேலைக்கு செல்வார் என்றால் ஏதோ எலக்ட்ரிக் கடையில் வேலை செய்தார். கீழ் தளத்தில் யார் இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. நான் வேலைக்கு சென்றுவிடுவேன். முத்துப்பாண்டி மனைவி, ஜான் மனைவி ஆகியோரைத்

தெரியாது. நாங்கள் குடியிருந்த காம்பவுண்ட் வீட்டில், காம்பவுண்டு கதவு உள்ளது அந்த கதவை திறந்து தான் உள்ளே வர முடியும். காம்பவுண்டு கேட்டை திறந்து தான் எங்கள் வீட்டிற்கு படி ஏறமுடியும். வெங்கடேசன் என்பவர் வீட்டிறகு செல்லவேண்டும் என்றால் படி ஏறி எங்கள் வீடு, கார்த்திக் என்பவர் வீட்டைத் தாண்டித் தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். நாங்கள் அந்த வீட்டில் 2 வருடங்களாக குடியிருந்தேன். நான் 2 வருடங்களாக குடியிருந்தும் அங்கு குடியிருந்தவர்கள் விபரம் பற்றி நான் தெரிந்துகொள்ளவில்லை. நான் காலை 09.30 மணிக்கு வேலைக்கு சென்றுவிடுவேன். வெங்கடேசன் என்பவர் எங்கள் வீட்டிற்கு அருகே சுமார் 3 முதல் 5 மாதங்கள் தான் குடியிருந்தார்கள். நான் வீட்டில் இருந்த 10 நாட்களில் வெங்கடேசன் என்பவர் எத்தனை மணிக்கு வேலைக்கு செல்வார் எத்தனை மணிக்கு சாப்பிட வருவார் என்றால் நான் பார்த்தது இல்லை. நான் எனது கணவர் வேலைக்கு சென்றவுடன் கதவை பூட்டிவிட்டு உள்ளே இருப்பேன். நான் வீட்டில் இருந்த சமயத்தில் கௌரியின் அம்மா அப்பாவோ, அவரது மாமனார், மாமியார் வந்து சென்றார்களா என்றால் நான் பார்த்தது இல்லை. வெங்கடேசன் என்பவரின் நண்பர் செந்தில் என்பவரை எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது, வெங்கடேசனையே நான் 2,3 முறை தான் பார்த்துள்ளேன். கம்பவுண்டு வீடு என்பதால் ஒரு வீட்டில் டிவி சத்தம் அதிகமாக வைத்தாலோ, பாத்திரங்கள் டம் என்று விழும் சத்தம் கேட்குமா என்றால் கேட்கும். அது போல் சத்தமாக போன் பேசினால் கேட்டுகுமா என்றால் கேட்காது. போலிஸ் விசாரணையில், கௌரியின் கணவர் கதவை தட்டிய பிறகு எனது கணவருக்கு போன் செய்த விபரத்தை சொல்லியுள்ளேன். அன்றைய தேதியில் வெங்கடேசன் வீட்டிற்கு யார் வந்து போனார்கள் என்ற விபரம் பற்றி எனக்குத் தெரியாது. நாங்கள் குடியிருக்கும் மறைமலைநகருக்கு குடியிருப்போர் சங்கம் உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நேருநகர் சிக்னல், நேருநகர், மறைமலை நகர் போன்ற இடங்களில் CCTV கேமிரா உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. கௌரி இறந்த விபரம் எப்படி எனக்குத் தெரியும் என்றால் போலிசார் வந்து சொல்லும்போது

தான் தெரியும். வெங்கடேசனுக்கும் கௌரிக்கும் இடையே அடிக்கடி சண்டை நடைபெற்று நானும் எனது கணவரும் சென்று பிரித்துவிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. இன்று காலை நான் 10.00 மணிக்கு நீதிமன்றத்திற்கு வந்தோம். நான், எனது கணவர், எனது அம்மா ஆகியோர் வந்தோம். எங்களுடன் வெங்கடேசன் வரவில்லை. நீதிமன்றத்திற்கு வந்த பிறகு வரண்டாவில் நின்று நான், எனது அம்மா, கணவர் ஆகியோர் பேசிக்கொண்டு இருந்தோம். அரசாங்க வக்கீலுடன் நான் பேசவில்லை. சம்பவ சமயத்தில் நான் தர்ஷன் Fabrics என்ற கம்பெனியில் வேலை பார்த்துக்கொண்டு இருந்தேன். அங்கு பணிபுரிபவர்களுக்கு வருகை பதிவேடு உள்ளது. வருகைப்பதிவேடு Manual தான். Biomatic கிடையாது. 31.07.2015 அன்று நான் விடுமுறையில் இருந்த விபரம் அந்த வருகைப்பதிவேட்டை பார்த்தால் தெரியும். தற்போதும் நான் அந்த நிறுவனத்தில் தான் பணிபுரிந்து வருகிறேன். நான் பணி செய்யும் நிறுவனம் வஜ்ரா அபார்ட்மெண்ட் ஆகும். அதன் முகவரி, SB8, G Block, பைபாஸ் ரோடு, மதுரை 625010. போலிசார் என்னை சம்பவம் நடைபெற்ற அன்றய தினம் சாயங்காலம் விசாரித்தார்கள். 2015 ம் வருடம் கௌரி இறந்த அன்று விசாரித்தார்கள். என்னை போலிசார் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் மாலை சுமார் 05.00 முதல் 06.00 மணி இருக்கும். அப்போதே போலிசார் கூட்டமாக வந்துவிட்டார்கள். என்னை போலிசில் எந்த அதிகாரி விசாரித்தார்கள் என்று எனக்குத் தெரியாது. போலிஸ் மோப்ப நாய், விரல் ரேகை நிபுணர்கள் இருந்தார்களா என்றால் எனக்குத் தெரியவில்லை. வெங்கடேசன் எங்கள் வீட்டின் கதவை தட்டிய போது எத்தனை மணி இருக்கும் என்றால் மதியம் சுமார் 02.30 மணி முதல் 03.30 மணி இருக்கும். நேரம் பார்க்கவில்லை. ஆனால் அது மதிய நேரம் ஆகும். வெங்கடேசனுடன் வேறு யாரும் உடன் இருந்தார்களா என்றால் இல்லை. அப்போது வெங்கடேசன் வீட்டில் வேறு யார் இருந்தார்களா என்றால் எனக்குத் தெரியாது. எனது அம்மா எங்களுடன் தான் இருக்கிறார்.

எப்போதும் கூட இருக்கமாட்டார். அன்றைய தினம் என்னுடன் தான் ரூமில் படுத்திருந்தார். அந்த சம்பவத்திற்கு பிறகு நான் வெங்கடேசனை பார்க்கவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188/ 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 5** |
| **Name** | : | **திருமதி.மஞ்சுளா** |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **15.02.2022**

முதல் விசாரணை :

நான் தற்போது திருநகரில் குடியிருந்து வருகிறேன். அசா4 சங்கீதா எனது மகள் ஆவார். ஆஜர் எதிரியைத் தெரியாது. கௌரியின் வீட்டுக்காரர் வந்து எங்கள் வீட்டு கதவை தட்டினார். அவரது மனைவியை அவர்தான் இழுத்துக்கொண்டு வந்தார். கௌரியின் சேலை விலகி இருந்தது. அதை எடுத்துவிடச்சொன்னார். எனது மகள் தான் சேலையை சரிசெய்துவிட்டார். மதியத்திற்கு மேல் இருக்கும். எப்போது நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை